பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (24.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:358

# வாகரையின் தெற்கு எல்லையில் படைகள்-புலிகள் கடும் மோதல்!

## தாக்குதலை ஆரம்பித்ததாக இரு தரப்புகளும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, நவம்பவர் 24

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தின் தெற்கு எல்லையில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுக்காலை கடும் மோதல் வெடித்தது. இரண்டு தரப்பினரதும் கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையில் தரை வழிச் சண்டை மூண்டிருக்கிறது. பல்குழல் எறிகணைகள் மற்றும் ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களாலும் மற்றும் விமானக்குண்டு வீச்சுக்களினாலும் அந்தப் பிரதேசம் அதிர்ந்தது.

தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதி நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் அரசுப் படைகளே புதிதாக தாக்குதலைத் தொடுத்திருக்கின்றன என்று புலிகளும், படைநிலைகளை நெருங்கி வந்த புலிக்ளை விரட்டவே விமானப்படையின் உதவியுடன் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று அரசுத்தரப்பும் ஒருவரை மற்றவர் மாறி மாறிக் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்றுக்காலை முதல் இருதரப்பினரும் பரஸ்பரம் கடும் ஷெல் வீச்சில் ஈடுபட்டனர் என்றும், அதன் பிறகு தரை வழிச் சண்டை மூண்டது எனவும் தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலை யார் முதலில் ஆரம்பித்தார்கள் என்பது தொடர்பில் இரு தரப்புகளும் ஒருவர் மீது அடுத்தவர் மாறி மாறி குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

வாகரையில் தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் தெற்கு எல்லை ஊடாக இராணுவத்தினர் கவசவாகனங்கள் மூலமான ஒரு தாக்குதலைத் தொடுத்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகளின் இரா

(08ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் அதிரடிப்படையினர் மூவர் பலி

அம்பாறை, நவ.24

அம்பாறையில் நேற்றுக் காலை 7.35 மணியளவில் விசேட அதிரடிப்படையின் நிலைமீது அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் மூவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பல்நேர மின் விநியோகம் 2மணிநேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

குடாநாட்டில் பகல் நேரத்தில் வழங்கப்படும் மின்விநியோகம் இன்றுமுதல் மேலும் இரு மணிநேரத்துக்கு நீடிக்கப்படவுள்ளது.

தற்போது காலை 9 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை விநியோகிக்கப்படும் மின்சாரம் இன்றுமுதல் பிற்பகல் 4மணி வரை நீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 'உதயன்' தாக்கப்பட்டமை தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### மாவை சேனாதிராஜா எம்.பி. நேற்று சபையில் கேள்வி

கொழும்பு, நவ. 24

'உதயன்' பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டமை தொடர்பாகவும், அங்கு கடமை புரிந்த இரண்டு ஊழியர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் அரசு ஏன் இன்னும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை? அக்கொலையாளிகள் தொடர்பாக தகுந்த ஆதாரங்கள் அரசிற்குக் கையளிக்கப்பட்டும் கூட அரசு கொலையாளிகளைக் கைது செய்யாது ஏன் மௌனம் சாதிக்கிறது?

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலைவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.மாவை சேனாதிராஜா கேள்வி எழுப்பினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்படுகின்றனர். இது தொடர்பாக ஆதாரங்களைக் கையளித்தும் இந்த அரசு விசாரணை எதனையும் மேற்கொள்ளவில்லை.

15 சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த இப்போது நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவும் ஊடகவியலாளர்கள் கொலைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு ஏன் அரசு இடமளிக்கவில்லை?

'சத்தி' ஊடகப் பணிப்பாளர் சிறிரங்காவுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களமே இத்தகவலைக் கொடுத்துள்ளது. அப்படியென்றால் இத்தகவல் கொடுத்தவர்கள் யார்?, கொலைசெய்யத்திட்டமிட்டுள்ளவர்கள் யாவர்? - என்பதை இந்தப் பொலி

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலர் ஜனாதிபதியுடன் பேச்சு



கொழும்பு, நவ.24

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங் கர் மேனன் இரண்டுநாள் விஜயமாக நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட செய்தியுடன் அவர் கொழும்பு வந் திருக்கிறார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று இரவு கொழும்பு வந்துசேர்ந்த மேனன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை

(08ஆம் பக்கம் பார்க்க)

### மஹிந்த புதுடில்லி வரும்போது

## இலங்கைத் தமிழர் இன அழிப்பை நிறுத்த அழுத்தம் கொடுக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்துவேன்

### கருணாநிதி தகவல்

சென்னை, நவ.24

இலங்கைஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ புதுடில்லிக்கு வரும்போது, இலங்கைத் தமிழர்கள் மீது அந்நாட்டு அரசு நடத்தும் இன அழிப்பை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டுவருவேன்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி.

தமிழக அரச செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியளாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

முதல்வர் கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை நிறுத்தி சமாதானத்திற்கான சூழ்நிலையை இலங்கை அரசாங்கம் உருவாக்கவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

அந்த நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சமாதான பேச்சுவார்த்தை மூலமான உபாயங்களை கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகிறேன்.

அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்வதையும் அவர்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகித்து இம்சைப்படுத்துவதையும் இலங்கை அரசு நிறுத்தி சமாதானத்திற்கான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது இப்பிரச்சினையை மத்திய அரசாங்கத்தின் முக்கிய கவனத்திற்குக் கொண்டு செல்வேன் - என்றார்

(அ)

## இந்தியாவின் பொறுமையையே ஜனாதிபதி மஹிந்த எதிர்பார்க்கிறார்

புதுடில்லி, நவ.24

தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கு வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு இடைவிடாது இந்தியா அழைப்பு விடுத்து வருகின்ற போதிலும், அரசியல் தீர்வு விடயத்தை நிதானமாகக் கையாள்வதற்குத் தனக்குக் கால அவகாசம் வேண்டியிருக்கிறது என்றும், எனவேஅரசியல் தீர்வொன்றுக் குத் தன்னை அவசரப்படுத்தி நெருக்குதலுக்கும் ...ளாக்கி விட வேண்டாமென்று ஜனாதி... மஹிந்த ராஜபக்ஷ, இந்தியத் தலைவர்... புதுடில்லியில் சந்திக்கும்போது பவ்வியமாக கேட்டுக்கொள்ளக்கூடுமென விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

பேச்சு மூலம் அரசியல் தீர்வொன்று எட்டப்படுமிடத்து இந்தத் தீர்வுக்குள் இதர தமிழ்க் கட்சிகளும் உள்ளடக்கப்படும் என்றும் இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறப்படும் எனவும் தெரிய வருகிறது.

நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை சனிக்கிழமை இந்தியா செல்கிறார். இந்த வருடத்தில் இவர் இந்தியாவுக்கு மேற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஆயிரம் தபால் பொதிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றன

யாழ்ப்பாணம்.நவ.24

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு இன்று புறப்படவிருக்கும் 'யால' கப்பலில் 3 ஆயிரத்து 492 தபால் பொதிகள் எடுத்துவரப்படுகின்றன என தபால் மா அதிபர் செல்வின் சேனதீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் -

தபால் பொதிகள் வந்து சேர்ந்ததும் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும் - யாழ். பிராந்திய உதவி தபால் மா அதிபர் எஸ். குமரகுரு நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

திருமலையில் இருந்து எடுத்துவரப்படும் தபால் பொதியில் 3 ஆயிரத்து 149 பார்சல்கள் என்றும் -

எஞ்சியவையே தபால்கள் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## வயிரமுத்து செல்லையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து செல்லையா 22.11.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, தவனேஸ்வரன், சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரன், லலிதா, நந்தகுமாரி ஆகியோரின் மாமனும் சதீஸ்கரன், சசிகலா, சுவர்ணா, சுரேஸ்கரன், சர்மிளா, கஜனி, ஜனனி, துஷ்யந்தினி, தபேஷன், தாட்சாயினி, ஜங்கரன், அபிராம் ஆகியோரின் பேரனும் அஜந்தா, சுபானி, ஆதிஷன், அனோச், அனோஜா, அபிஷா, ஏனோஸ், எனலின், எனலினி, லினி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2006) வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில் (55541)

தகவல்:
செ. தவனேஸ்வரன்
(மகன் - தபேஷன் விவசாய மாளிகை).

## முருகப்பர் இளையதம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோல்புறூர் தமிழ் வித்தியாலயம், கரணவாய் தெற்கு விநாயகர் வித்தியாலயம்)



அன்னார்திருமதி வள்ளிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும் இராகவன் (அதிபர் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), மாதவன் (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா தெற்கு வலயம்), அமரர் வாசவன் (ஆசிரியர்), கேசவன் (சுவிஸ்), மாலதி, சேந்தன் (நிதி உதவியாளர் - நகரசபை வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரி (ஆசிரியை திருஇருதயக்கல்லூரி), மாலதி (ஆசிரியை வவுனியா மதிய மகா வித்தியாலயம்), பபிதா (சுவிஸ்), ஜெனாதன் (கரன் தேநீர்ச்சாலை - நெல்லியடி), ராஜினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (சி-50460)

தகவல்:
இராகவன் (அதிபர் - மகன்).

## திருமதி மாகிறட் ஆசிர்வாதம்

(முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/புனித மரியாள் வித்தியாலயம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாகிறட் ஆசிர்வாதம் 22.11.2006 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோன் டிலிப் - ஜாசியா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஆசிர்வாதத்தின் அன்பு மனைவியும் மங்களிக்கா, சந்திரிக்கா காலஞ்சென்ற றமேஸ் ஆகியோரின் தாயும் லோறன்ஸ் ஜீவா (கடா), ஜெயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஜெபனின் பேர்த்தியும் காலஞ்சென்ற யோசெப் (றோஸ் ஆட்ஸ்) மற்றும் ஆனந்தம் (டாக்டர் - கனடா) காலஞ்சென்றவர்களான திரேசம்மா குணரெட்ணம், மாட்டின், ஸ்ரனிஸ்லோஸ் மற்றும் Dr. பியற்றிஸ் ஜெசிந்தா (பிரான்ஸ்), அனுலா ஆனந்தராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியை O.L.R., யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*854, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (55543)

தகவல்:
ஆ. ஆனந்தராஜா
(மைத்துனர்)

## செல்லத்துரை அருளம்பலம் (அருள்)



தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை அருளம்பலம் நேற்று (23.11.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் பஞ்சலிங்கம், சொர்ணபுஸ்பம், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், சின்னத்தம்பி, நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும் இராசரத்தினம், முத்துக்குமாரசாமி, நாகேஸ்வரி, திலகவதி, பஞ்சலிங்கம், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பூமணி, யோகம் ஆகியோரின் மைத்துனரும் கமலவேணி (ஆசிரியை - சுதுமலை சிதம்ப பாரதி வித்தியாலயம்), சுபதர்சினி (கனடா), குகனேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரன் (இலங்கை வங்கி - ஸ்ரான்லி வீதி), குகராஜா (கனடா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் தரங்கினி, வைஷ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி), கனடாவில் வாழும் புருஷோத்தமன், சயமீரா, சரண்யா, றதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

"குகன் அகம்",
தாவடி. (55537)

தகவல்:
சி. யோகேஸ்வரன்
(மருமகன்).

# வவுனியாவில் புதன் இரவு இளைஞர் சுட்டுக் கொலை

வவுனியா, நவ. 24

வவுனியா, தெற்கிலுப்பைக் குளம் பகுதியில் புதன் இரவு இனந்தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் பி. ஜெயப்பிரகாஸ் (வயது-23) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரவு 11 மணியளவில் வீட்டுக்கு வந்தவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து பேர் அடங்கிய சரளமாகத் தமிழ் மொழி பேசியவர்களே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று இவரின் சிறிய தந்தையார் வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியனிடம் சாட்சியம் அளித்தார். வந்தவர்கள் கறுப்புத் துணியால் முகத்தைக் கட்டியிருந்த தன் காரணமாக அவர்கள் யார் என்று அடையாளம் காணமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலத்தினை ஒப்படைக்குமாறும், மேலதிக விசாரணைகளினை மேற்கொள்ளுமாறும் நீதிவான், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமார சாந்தநாயக்கவுக்கு உத்தர விட்டார். (ஐ-312)

# சுண்டுக்குழியில் குடும்ப அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,நவ.24

சண்டுக்குளி வடக்கு (ஜே-75), சுண்டுக்குளி தெற்கு (ஜே-76) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் குடும்ப அட்டை மீளாய்வு எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணி முதல் யாழ். பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(1)

# பேருந்து சேவை பாதிப்பு

தென்மராட்சி,நவ.24

பருத்தித்துறை சாலையில் எரிபொருள் பற்றாக்குறையினால் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் தனியார் வாகனங்களில் சிரமங்களின் மத்தியில் பயணங்களை மேற்கொண்டனர்.

நண்பகல் பன்னிரண்டு மணிக்கு எரிபொருள் வழங்கப்பட்டதையடுத்து பேருந்து சேவைகள் வழமை போல் நடைபெற்றன. (ப)


A/L 2007
BIOLOGY
Paper Class
Mr.Anton
A/L 2007 & 08
Che., Phy., C/Ma.
நடைபெறுகின்றது.
SHAMROCK
சுப்பிரமணிய பார்க்.


## தவறிவிட்டது

தே.அ.அ.இல. 397200205V இ.இராசபூபதி. தே.அ.அ.இல. 725191073V சு.சுபாங்கினி ஆகிய இரு தேசிய அடையாள அட்டைகளும் கச்சேரிக்கும் குமாரசாமி வீதி, கந்தர்மடத்திற்கும் இடையே தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் C/o Dr.S.மகேசன், "தோல்பியூர்" குமாரசாமி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே: 021 222 3821. (55540)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் அலுவலக ஊழியராகப் பணியாற்றிய
**சின்னத்துரை சந்திரமோகல்.**
அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/இராமநாதன் கல்லூரி.

# மரண அறிவித்தல்

## பொ. இராமநாதன்

பண்ணாகத்தைச் சேர்ந்த மலாயன் பென்சனர் அமரர் செல்லப்பா பொன்னம்பலம் தம்பதியரின் மகன் இராமநாதன் (ஓய்வுபெற்ற சுங்க இலாக்கா அதிகாரி - சிங்கப்பூர்) 22.11.2006 புதன்கிழமை சிங்கப்பூரில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள

பண்ணாகம்,
சுழிபுரம். (55539)

தகவல்:
[illegible]
(சகோதரன்).

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் செல்வரெத்தினம்



மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் செல்வரெத்தினம் நேற்று (23.11.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கம், செல்லாச்சி, உமையாத்தை, ராசம்மா, காசுவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், கனகவதிப்பிள்ளை, கார்த்திகேசு, இளையதம்பி, இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, மண்டைதீவு இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
இ. இரத்தினேஸ்வரன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாகலிங்கம் கனகரத்தினம்

(பெயின்ரர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகரத்தினம் 22.11.2006 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற கனகசபை - தங்கம்மா தம்பதியின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் கமலேஸ்வரி (இந்தியா), குலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீரங்கநாதன், முரளீதரன் (லண்டன்), யுகபாலன் (பெயின்ரர்), சந்தானகோபால், பரதாமணி (சுவிஸ்), பேரின்பநாயகி ஆகியோரின் தந்தையும் மைதிலி (லண்டன்), லோகநாயகி, கிரிஸ்தா (சுவிஸ்), கணேசலிங்கம், உதயராஜன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் பிரபா, பிரதீஸ், கஜன், ஜெகன், சித்திரகலா, விலோஷினி, பிரகாசினி, கோகுலன், திவாகரன், ஜெனித்தா, சகானா, சர்வேஸ்வரன், ஆனந்தன், ஆர்த்தி, ஆதித்தன் ஆகியோரின் பேரனும் பிரவீணாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2006) வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (55546)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சங்கரப்பிள்ளை கார்த்திகேசு

(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (23.11.2006) வியாழக்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் அகிலேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வலக்ஷுமியின் அன்புத் தந்தையும் அ.மகேந்திரராஜாவின் (இலுவில் மத்திய கல்லூரி) அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (ஆசிரியர்) - ஜீவரத்தினம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சட்டநாதர் கனகசபாபதி - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதி, காலஞ்சென்ற அன்னபூரணம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரவணபவன், தியாகராசா, கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற சோமசுந்தரம், சண்முகசுந்தரம், V.M. குமாரசாமி, Dr. வேதாரணியம், கனகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் திருமதி அருணாஜலம் ஞானேஸ்வரியின் அன்புச் சகலனும் க.பொன்னுப்பிள்ளையின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம். (55544)

தகவல்:
அகிலேஸ்வரி (மனைவி)

## திருமதி தெய்வானைப்பிள்ளை நாகையா



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கிராம்புவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் அல்லாரை தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை நாகையா 23.11.2006 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகையாவின் பாசமிகு மனைவியும் கதிரவேற்பிள்ளை, நல்லதம்பி (இந்திரன், நகரசபை அலுவலர் - சாவகச்சேரி), நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ராசன்), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரமதி, தவமணி, ஜெயபாலரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமியும் கவிதமாலினி, கவிதரூபனா, குமணராஜ், சுபோஜன், சுஜிதா, கோபிகா, ஹஜீபன், கோபிராஜ், நிருசியா, ஸ்ரீராஜ், ரவிராஜ், தர்சிகா, தனுஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொப்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யா/ அல்லாரை அ.த.க. பாடசாலை அருகில்,*
*அல்லாரை தெற்கு, மீசாலை.* (சி-50464)

தகவல்:
குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைத்தலைமை அறிக்கை; வரவேற்கின்றார் ரம்புக்வெல

கொழும்பு, நவ .24

''நாட்டின் இறைமைக்கும், மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினால் அத்தாக்குதலை முறியடிக்கும்வகையில் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்ற அரசின் நிலைப்பாட்டை இணைத்தலைமை நாடுகள் ஏற்றுள்ளன. புலிகளின் தாக்குதல்களால் நிலைமை மோசமாகியுள்ளது என்றும் புலிகளை அரசின் சமதரப்பாகத் தாம் ஏற்கவில்லையென்றும் இணைத் தலைமை நாடுகள் தெரிவித்துள்ளன. இதுகுறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.''

- இவ்வாறு அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்றுமுன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக வாஷிடனில் கூடி ஆராய்ந்த இணைத்தலைமை நாடுகள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், இரு தரப்பினரும் அதைச் சரியாகப் பின்பற்றத் தவறுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளன.

எமது நாட்டு மக்களின் பாதுகாப்பிற்கும், நாட்டின் இறைமைக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர். இந்த நிலைமையை நாம் அனுமதிக்கமாட்டோம். இதை முறியடிக்கப் பதில் தாக்குதல் நடத்துவோம் என இணைத் தலைமை நாடுகளுக்கு நாம் அறிவித்திருந்தோம். அதை இணைத்தலைமை நாடுகள் ஏற்றுள்ளன.

அத்தோடு, புலிகள் தொடர்ந்தும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதால் இலங்கையில் நிலைமை மோசமடைந்துள்ளது. புலிகளை அரசிற்கு ஈடான சமதரப்பாக நாம் ஏற்கவில்லை என்றும் அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

இருந்தும் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் இரு தரப்பினரும் போதிய அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் செயற்படவில்லையெனவும் அவை குற்றம் சுமத்தியுள்ளன - எனக் கூறினார் ரம்புக்வெல. (ஐ)

# நோய் பரவும் இடங்களில் நடமாடும் சேவை நடத்த ஏற்பாடு

## செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன்

யாழ்ப்பாணம், நவ.24

குடாநாட்டில் பரவிவரும் 'சிக்குன் குனியா' எனச் சந்தேகிக்கப்படும் நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு நடமாடும் மருத்துவ சேவைகளை நடத்துவதற்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை முன்வந்துள்ளது.

யாழ். சுகாதார பணிப்பாளரின் அனுசரணையுடன், தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக, தேவைப்படும் இடங்களில் தினமும் நடமாடும் மருத்துவ சேவையை நடத்தத் தயாராக இருப்பதாகவும் -

இச்சேவையைப் பெறவிரும்புபவர்கள் யாழ்.கிளையுடன் பிரிவுத்தலைவர்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளும்படியும் - செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கேட்டுள்ளார். (1)

# வெளிநாட்டுத் தூதர்களை பலாலியில் யாழ். இராணுவத் தளபதி வரவேற்றார்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த வெளிநாட்டுத் தூதர்களை பலாலி விமான நிலையத்தில் வைத்து யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பி.ஏ. சந்திரசிறி வரவேற்றுள்ளார்.

இவர்கள் யாழ்ப்பாண நிலைமைகளைப் பார்வையிட கடந்த 21ஆம் திகதி பலாலியை வந்தடைந்து குடா நாட்டில் இரண்டு தினங்கள் தங்கியிருந்தனர்.

அவர்களது வருகை தொடர்பாக பலாலி படைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இராணுவத் தளபதி தற்போது யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் மக்களுக்குத் தேவையான சுமுக நிலையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உட்பட பொது மக்களின் அத்தியாவசிய சேவைகள் மனிதாபிமான தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இராணுவத்தினரால் எடுக்கப்பட்ட திட்டங்கள் பற்றி அவர்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

யாழ். மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவது உட்பட மக்களுக்காக மேற்கொள்ளப்படும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் பற்றி தமது பாராட்டைத் தெரிவித்த பிரதிநிதிகள், இராணுவத்தினரின் மனிதாபிமானப் பணிகளையும் பாராட்டினார்கள்.

பின்னர் இவர்கள் யாழ். பிரதேச அரசாங்க அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திப்பதற்காக இராணுவத் தலைமையகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)



வெளிநாட்டுப் பிரமுகர்கள் யாழ்.தளபதியால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

# யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு 313 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள்

## சேவா லங்கா நிறுவனம் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கி இருப்பவர்களுக்கும் நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கும் 313 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப்பொருள்களை வழங்குவதற்கு சேவா லங்கா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தப் பொருள்களில் 63 மெற்றிக் தொன் கப்பல் மூலம் காங்கேசன்துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் -

மிகுதி 250 மெற்றிக் தொன் பொருள்களை விரைவில் எடுத்துவர இருப்பதாகவும் -

அவை வந்து சேர்ந்ததும் விநியோகம் இடம்பெறும் என்றும் - மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஜேர்மன் 'அக்கிறோ அக்சன்' நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடனும் நிதி உதவியுடனும் இந்த நிவாரண உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஆழிப் பேரலை வீடமைப்புத் திட்டம் அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டால் தடைப்பட்டுப்போய் இருப்பதாக அவர் கவலை தெரிவித்தார். (203-88)

# நினைவு தினம்

யாழ்ப்பாணம், நவ.24

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் நினைவு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்றத்தில் மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம், சமூக அபிவிருத்தி மன்ற முன்னாள் பணிப்பாளர் த.சீவரத்தினம், மன்ற நிர்வாக சபை உறுப்பினர் திருமதி ஜெபமணி ஜோசப் ஆகியோர் ஞாபகார்த்தப் பேருரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (203)

# நாயன்மார்கட்டில் ப.நோ.கூ. சங்கக் கிளை

நல்லூர், நவ.24

வலிகாமம் தென்கிழக்கு - நீர்வேலி ப.நோ.கூ. சங்கம் நாயன்மார்கட்டு மக்களின் வசதி கருதி நாயன்மார்கட்டு சந்தியில் புதிய கிளை ஒன்றை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் கோரிக்கை அடுத்து அரசாங்க அதிபர் கே.கணேஸ் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து புதிய கிளை திறப்பதற்கான ஏற்பாடகளை கோப்பாய் பிரதேச செயலர் எஸ். மோகன்றாஸ் மேற்கொண்டிருந்தார்.

பாரதி சனசமூக நிலையத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் மோகன்றாஸ் கிளையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நீர்வேலி ப.நோ.கூ.சங்கத் தலைவர் என்.சுந்தரலிங்கம், கிராம அலுவலர் கே.ஜெயந்திரன், சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.சிவலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (203-111)

# சிற்றுண்டிகளின் விலை பன்மடங்கு அதிகரிப்பு

தென்மராட்சி, நவ.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிற்றுண்டி நிலையங்களில் சிற்றுண்டி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கான பொருள்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படுகின்ற போதிலும் சிற்றுண்டிகளின் விலைகள் முன்னரை விட மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாணுக்கு விலை நிர்ணயித்தது போல சிற்றுண்டி வகைகளுக்கும் அரச அதிகாரிகள் விலை நிர்ணயம் செய்யவேண்டுமென மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். .(ப)

# பிற்பகலுடன் வெறிச்சோடும் சாவகச்சேரி நகரப் பகுதி

யாழ்ப்பாணம், நவ.24

சாவகச்சேரி நகரப்பகுதி தினமும் பிற்பகல் 2.30 மணியுடன் வெளிசோடிக் காணப்படுகிறது.

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து 775, 811, 765 ஆகிய இலக்க பஸ் சேவைகள் பி.ப. 2.30 மணிக்கு கடைசி சேவையாக இடம்பெறுவதால் இந்த பஸ்களில் நகரப் பகுதி அரச அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோர் பணியை முடித்து சென்றுவிடுகின்றனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து தென்மராட்சிக்கு செல்வோரும் பிற்பகல் 2.30 மணிக்கு முன்னரே அலுவலகங்களை விட்டுச் செல்கின்றனர்.

பேருந்து சேவையினை காரணங்காட்டி அரச அலுவலகங்கள், வங்கிகள் பொது மக்களுக்கான சேவைகளை நண்பகல் 12 மணியுடன் நிறுத்துகின்றன.

எமது கடமையில் ஆர்வமுள்ளது. இருந்த போதிலும் ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு அமுல்செய்யப்படுகின்றது.

இந்நிலையில் பிற்பகல் வேளைகளில் படையிரினரின் வாகன தொடர் அணிகள் வரும்போது வீதியில் செல்லும் வாகனங்கள் மணிக்கணக்கில் தடுத்துவைக்கப்படுகின்றன.

இதனால் நேர காலத்துடன் வீடு செல்ல வேண்டியுள்ளதாக தூர இடங்களிலிருந்து வரும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (203)

# பால்மா விநியோகிக்க நடவடிக்கை

நல்லூர், நவ.24

செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகத்தினரின் அனுசரணையுடன் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு அங்கர் பால்மாக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா. த் தெரிவிக்கப்படுகிறது. (203-111)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மருத்துவ சேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ முகாம்கள் மூலம் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்தில் விக்னேஸ்வராக் கல்லூரி, மணியகாரன் தோட்டம் சுடரொளி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு வாரத்தில் இரண்டு தடவைகளும் -

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிறுவனத்தின் திட்டப் பிரிவிலுள்ள கைதடி நாவற்குழிப் பகுதிகளிலுள்ள பதினைந்து கிராமங்களுக்கும் வாரத்தில் நான்கு தடவைகளும் நடமாடும் மருத்துவ சேவைகள் இடம்பெறுவதாக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (ப)

# விநியோகத்தைத் துரிதப்படுத்த வேலை நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகத்தைத் துரிதப்படுத்தும் முகமாக வேலை நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல.நோ.கூ. சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்துள் ளார்.

இந்நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வரவுள்ளது எனவும் -

இன்றுமுதல் காலை 8 மணிக்கு கிளைகள் அனைத்தும் திறக்கப்பட்டு 8.30 இற்கு விநியோகம் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

# பரு.கால்நடை வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சைக் கூடம் திறப்பு

வடமராட்சி, நவ.24

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நியாப் II திட்டத் தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய சத்திர சிகிச்சைக் கூடத் திறப்பு விழாவும் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த பண்ணையாளர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

கால்நடை வைத்திய அதிகாரி சி. வசிகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சத்திர சிகிச்சைக் கூடத்தைத் திறந்த வைத்தார்.

வடபிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி அமிர்தலிங்கம், வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டறவுச் சங்கத் தலைவர் என். மகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டுக்கான சிறந்த பண்ணையாளர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மாடுவளர்ப்பு - மா. கணேசன் - தும்பளை, என்.ரகு- பொலிகண்டி, பா.பாஸ்கரன்- பழவத்தை.

ஆடு வளர்ப்பு - சி.பரிமேலழகர் - வராத்துப்பளை, என்.தம்பிராசா - திக்கம், என்.கிருபாகரன் - திக்கம்.

கோழிவளர்ப்பு - பி.அரியகுணராசா - அல்வாய், ஆர்.ராதிகா - புலோலி கிழக்கு, இ.ஜெயந்தன் - தும்பளை.

(203-173)

# சங்கக் கடை உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.24

நல்லூர் மத்தியில் உள்ள 12ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடை நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு வேளையில் கதவு உடைக்கப்பட்டு, பல ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் களவாக எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜே/107 கிராம அலுவலர், கூட்டுறவு பரிசோதகர் மற்றும் பொலீஸார், இராணுவத்தினரின் முன்னிலையில் நேற்று முன்தினம் இருப்பு கணக்கெடுக்கப்பட்டது.

அரிசி 4மூடை, மா 6 மூடை ,தேங்காய் எண்ணெய் 10 லீற்றர், பூடு 18 கிலோ மற்றும் மல்லி, செத்தல் மிளகாய், அங்கர், நெஸ்பிறே, டைமன் போன்ற பர்ல்மா பக்கற்றுக்களும் எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருட்டுப் போன் பொருள்கள் பற்றிய அறிக்கையின் பிரதியை நல்லூர் பகுதி இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

(ப-88-111-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்



### உயர் திரு A.T.A. தேவராஜா

(மாவட்ட முகாமையாளர்)

**அவர்கள் 24.11.2006 அன்று தமது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்கையில்**

வங்கி வாழ்வினில் வாடிக்கையாளர் சேவையில்
வருடங்கள் முப்பத்தெட்டு முழுமைபெற்று
தன்பணி சிறப்புற திகழ்ந்திடும் செம்மலின்
அன்பினை மறவா வங்கி உறவுகள்
நற்பணி புரிந்த நாயகன் பல்லாண்டு
நலமே வாழ்ந்திட பிறந்த நாளிதனில்
பேறுகள் பதினாறும் பாரினில் பெற்றே
மகிழ்ந்திட வாழ்த்தினோம் வாழியவே!

(சி.50453)

இலங்கை வங்கி,
வட பிராந்திய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

உதவிப் பொது முகாமையாளர் (வ.பி),
சக ஊழியர்கள்,
(இலங்கை வங்கி - யாழ்.மாவட்டம்).

## மாபெரும் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு - 2006

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு மல்லாகம் சதாசகாய அன்னை பங்கு இளைஞர் ஒன்றியத்தால் மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் 25, 26, நவம்பர், 2006 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.முன்னனி ஆசிரியர்களான

விஞ்ஞானம் - திரு.டார்வின்
கணிதம் - திரு.தயாபரன்
ஆங்கிலம் - திரு.செல்வகாந்தன்
சமூகக்கல்வி - திரு.மகேந்திரன்
கிறிஸ்தவம் - திருமதி.மல்லிகா

மற்றும் முன்னனி ஆசிரியர்களால் நடாத்தப்படும்.

குறிப்பு :- கணனி மயப்படுத்தப்பட்ட விளக்கத்துடன் பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.

பரீட்சைக்கு தோற்றும் ஆர்வமுள்ள மாணவர்களை பங்கு பற்றிப் பயனடைய அழைத்து நிற்கின்றோம்.

★ காலம் - 25, 26 நவம்பர், 2006.
★ நேரம் - காலை 8 மணி தொடக்கம்.
★ இடம் - யா/மல்லாகம் மகா வித்தியால்ய மண்டபம்.

* அனுமதி இலவசமானது

தொ.பே:-0602213067

தலைவர்,
பங்கு இளைஞர் ஒன்றியம்,
மல்லாகம்.

(55489)

## வேலணை பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல்

| இல | வேலை விவரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியவை | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1 | தன்மனை வீதி (கிரவல்) திருத்தம் புங்குடுதீவு | 6000.00 | 1000.00 |
| 2 | மணியகாரன் (கிரவல்) திருத்தம் புங்குடுதீவு | 5000.00 | 1000.00 |
| 3 | தொழிலாளர்புரம் (கல்லிட்டு தாரிடல்) வீதியும் மதகு திருத்தமும் புங்குடுதீவு | 9000.00 | 1000.00 |

உறுதியான நோக்கம் உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கேள்விப் பத்திர ஆவணங்கள் பின்வரும் ஒழுங்கில் வழங்கப்படும்.

(அ) படிவங்கள் 28.11.2006 முதல் 14.12.2006 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை அட்டவணையிலுள்ள தொகையினை பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) கேள்விப்பத்திரத்தின் இரு பிரதிகளையும் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு 'செயலாளர், வேலணை பிரதேசசபை' என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் 24.12.2006 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) இக்கேள்விகள் 24.12.2006 நண்பகல் 12 மணிக்கு திறக்கப்படும். கேள்வி சமர்ப்பித்தவர் சமூகமளிக்கலாம்.

(ஈ) தாரிடல் வீதிக்கு தேவையான தாரினை ஒப்பந்தகாரரே தருவித்துப் பயன்படுத்த வேண்டும்.

மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை.

(சி.50448)

## தவறி விட்டது

சொர்ணவடலி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த தியாகராயா துஷ்யந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (831731729V) விசேட அடையாள அட்டை என்பன யாழ். நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (55519)

## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

45 நாள் நிரம்பிய பொக்சர் நாய்க்குட்டி (பாகோ ஊசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு.

அல்பா மிக்சர் லேன்,
உடுவில் வீதி, மானிப்பாய்.
T.P : 222 2887

(55492)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பூமணி கனகரத்தினம்

(நல்லைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல் நிர்வாகியின் மனைவி)



எம்மோடு ஒன்றாய் ஒரு கூட்டில் இருந்து உறவாடி வாழ்ந்த உறவே- நீங்கள் வாழ்ந்த இடத்தையும் வளம் நிறைந்த பாசமான சொந்தங்களையும் விட்டு தூரஇடம் சென்று விட்டீர்! துடிக்கிறது எம் உள்ளம். கண்ணால் உம் உடலைக் காணக்கூட முடியாத பாவிகளாய் நாமிங்கு பதறுகின்றோம் கண்ணீருடன் - உங்கள் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
நடேசன் வனிதாமணி தம்பதியர்,
ஞானசேகரம் கிருசாந்தி தம்பதியர்,
சுஜீவன் விஜிதா தம்பதியர்,
பேரப்பிள்ளைகள்.

(55498)

## வல்லையில் மீண்டும் சோதனை தீவிரம்

பருத்தித்துறை, நவ.24

வடமராட்சிப் பகுதிக்கு வல்லைச் சோதனைச் சாவடி ஊடாக உள் நுழையும் அனைத்து வாகனங்களும் கடும் சோதனைக்கு பின்னரே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

மாவீரர் நாளை முன்னிட்டு சோதனைகளை அதிகரித்திருக்கும் படையினர் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் கடும் சோதனைக்கு உட்படுத்துவதுடன் பயணிகளையும் வாகனங்களில் இருந்து இறக்கி உடற்சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சோதனைகளால் பல மணி நேர தாமதம் ஏற்படுவதுடன் மாலை வேளையில் பயணிக்கும் பயணிகள் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட பின்பும் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக மாலையில் பஸ்களில் வருவோர் தமது வீடுகளுக்கு செல்வதில் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர்.

தமது உறவினர்களைக் காணாது பலர் பஸ் தரிப்பிடங்களில் காத்திருப்பதையும் காண முடிகின்றது. (203-118)

## தலைமைத்துவப் பயிற்சி

தென்மராட்சி, நவ.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் பயிற்சிகள் நடைபெறுமென பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் செ. உமாபாலன் அறிவித்துள்ளார். (203)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 ★ 10 ★ 1948



மறைவு
24 ★ 11 ★ 2003

### திருமதி எட்வேட் றீற்றா (ராணி)

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் ஆறுமோ எம் இதயம்?
குடும்பத்தின் குல விளக்காய் பாசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த தாயே!
உங்கள் நினைவுகளில்
நிற்கின்றோம் நாமெல்லாம்.

(55446)

'அன்னம்ஸ்,'
சங்கானை.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகளில்.....

தோற்றம்
01 - 01 - 1960



மறைவு
04 - 12 - 2005

### திருமதி ஜெயலட்சுமி சிவலிங்கம்

திதி : கார்த்திகை மாத பூர்வபக்கச் சதுர்த்தி, (24.11.2006)

பத்து மாதம் சுமந்து பகலிரவாய் எமக்காகவே வாழ்ந்து
எங்களில் ஒருவராய் எம்குடும்பப் பெருமை பேணி
நோவிலும் வலியிலும் எம்முயர்வையே நினைத்திருந்து
முருகையன் கழலினைச் சேர்ந்த எங்கள் குடும்ப விளக்கு
ஆருயிர் அன்னை எம் உடன் பிறப்பு
அமரர் சிவலிங்கம் ஜெயலட்சுமியை நினைவு கூருகின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(55470)

கார்த்திகா (மகள்)
மற்றும் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



### கந்தையா இராசேந்திரம் (வைரமுத்து மாமா)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசேந்திரம் (வைரமுத்து மாமா) 22.11.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும் உமாதேவி (இந்தியா), சத்தியாதேவி, கருணாதேவி, யசோதா, யசோதரன் (லண்டன்), இராசேஸ்வரன் (ஜேர்மனி), ரேவதி (பிரான்ஸ்), கிரிதரன், கிருஸாந்தி, பிரபா ஆகியோரின் அன்புத் தந்தையும் விநாயகமூர்த்தி (இந்தியா), ஸ்ரீஸ்கந்தராஜா (சிறி), இரத்தினவேலு (ரதி பென்ஸி ஹவுஸ்), ஜெகதீஸ்வரன் (மோகன்), பாக்கியநாதன் (பிரான்ஸ்), பாமினி (ஜேர்மனி), சந்திரகுமார் (குமார்), கிருபா, படிகலிங்கம் (படி) ஆகியோரின் அன்பு மாமனும் பிரதீபா, பிரசன்னா, பிரசாத், பிரவீனா, ஷர்மிலி, ஷன்யா, கிஷோன், நிஷோன், திவ்வியா, அகிஜன், ருபினி, செலினா, பிரின்ஸ், டுலக்ஷி, சரண்யா, விஜித், வினித், லக்ஷயினி, அச்சுதாயினி, அலெக்ஷன், அருஷ்ஷிகா, பிரணவன், மதுரிகா, அஸ்வினி, பாக்கியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

830, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(55521)

தகவல்:
இ.கிரிதரன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ்மக்களைக் கொன்றுகுவிக்கிறது அரசு

## அடைக்கலநாதன் எம்.பி. ஆவேசம்



கொழும்பு,நவ.24

விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்று கூறிக்கொண்டு இந்த அரசு, தமிழ் மக்களைக் கொன்று குவிக்கின்றது. இன்று இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத் திட்டமும் ஒரு யுத்தத்துக்கான முஸ்தீபாகத்தான் இருக்கின்றது.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான ஐந்தாவது நாள் விவாதத்தில் மிக ஆவேசமாகப் பேசினார் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

அரசு யாழ். குடாநாட்டு மக்களையும் வாகரை, கதிரவெளி பிரதேச மக்களையும் பட்டினிபோட்டு சாகடிக்க முற்படுகின்றது. உலகிலேயே இலங்கை மட்டும்தான் உணவுப் பொருள்களை ஆயுதமாக பயன்படுத்துகிறது.

யாழ்.மக்களைத் தொடர்ந்துபட்டினி போட்டால் அம்மக்கள் ஏ-9 வீதியை உடைத்துக்கொண்டு வெளி வருவார்கள். இதேபோல் மடுப்பிரதேசத்தில் வெளியே வர விடாமல் தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ்.மக்கள் அந்தப் பாதையை உடைத்துக்கொண்டு வெளியே வந்ததையும் கடந்த வாரம் கண்டீர்கள்.

யாழ். மக்கள் காலை முதல் பேக்கரிகளில் பாண் வாங்க வரிசையில் நிற்பதையும் உணவுப் பொருள்கள் வாங்க சங்கக் கடைகளில் வரிசையில் நிற்பதையும் காண கண்களில் நீர் பெருக்கெடுக்கின்றது. எமது மக்கள் விருந்தோம்பலுக்கு பெயர் பெற்றவர்கள். இன்று உணவுக்காக வரிசையில் நிற்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று தேர்தலின்போது கூறினார். இப்போது சமஷ்டி மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்கிறார். முன்னுக்குப் பின் முரணான போக்கையே ஜனாதிபதி கொண்டிருக்கின்றார்.



நாடாளுமன்றத்திலிருந்து...

எமது மக்கள் பட்டினி காரணமாக மனோதிடம் பெறுவார்கள், எழுச்சி பெறுவார்கள் இந்த எழுச்சி எமது தாயக விடுதலைக்கு வித்திடும். (த)

# வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

## ஆயுதக் களைவின் பின்னரே பேசவேண்டும் என்கிறார் வீரவன்ஸ



கொழும்பு,நவ.24

பிரிவினைவாத பயங்கரவாதிகளின் ஆயுதங்களைக் களைந்துவிட்டே இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் குறித்து பேச்சு நடத்தவேண்டும். வெளிநாட்டு சக்திகளுக்கும் ஆயுத பலத்துக்கும் அடிபணிந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாதென ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான ஐந்தாவது விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

வாஷிங்ரனில் நடைபெறும் இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டு முடிவில் என்ன வகையிலான அறிக்கை வெளிவருமோ என அரசு இன்று அஞ்சிக்கொண்டிருக்கின்றது. பாதகமான அறிக்கை வரக்கூடாதென ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றது.

புலிப் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காகவே ஜே.வி.பி. இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்க முடிவுசெய்துள்ளது. இருந்தும் இந்த வரவு-செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லையென்பதையும் தெரிவிக்கவேண்டும்.

மஹிந்த சிந்தனையை முன்வைத்தே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றார். கடந்த வரவு-செலவுத் திட்டம் ஓரளவு மஹிந்த சிந்தனைக்கு ஏற்ப அமைந்திருந்தது. ஆனால், இந்த வரவு-செலவுத் திட்டம் எந்தளவு மஹிந்த சிந்தனைக்கு ஏற்ப இருக்கிறதென்பது விவாதத்துக்குரியது.

புலிப் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் எமது நாட்டில் அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலருக்கு முன்னால் எமது ரூபா மதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது. பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டைவிட தற்போது அதிகரித்துள்ளது. பணவீக்கத்தைக் குறைக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் திட்டங்கள் இருக்கின்றனவா? ரூபாவின் மதிப்பு குறைவதால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கும் திட்டங்கள் இருக்கின்றனவா? இவை குறித்தே நாம் ஆராயவேண்டும்.

இந்த நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். இந்த நாட்டிலுள்ள எண்ணை வளம், எண்ணை அகழ்வதற்கான திட்டங்கள் எவையும் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. (த)

# யாழ்ப்பாணத்தில் ஊடுருவி தாக்குவதற்காகவே பாதையைத் திறக்கக் கோருகின்றனர் புலிகள்

## அத்துரலிய ரத்ன தேரர் சொல்கிறார்

கொழும்பு,நவ.24

யாழ். குடா நாட்டில் ஊடுருவி தாக்குதலை நடத்தவே புலிகள் ஏ-9 வீதியைத் திறக்கும்படி கோரிக்கை விடுக்கின்றனர் என ஜாதிக ஹெல உறுமய எம்.பி. அத்துரலிய ரத்ன தேரர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விஷேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றில் அவர் தொடர்ந்துபேசும்போது கூறியதாவது:-

ஏ-9 வீதியைத் திறந்து கப்பம் பெறவும் புலிகள் முயற்சிக்கின்றனர். ஏ-9 வீதி திறப்பது குறித்த அரசின் நிலைப்பாடு என்ன? இது குறித்து பிரதமர் இச்சபையில் விளக்கமளிக்க வேண்டும்.

வாகரைக்கு அனுப்பப்படும் பொருட்களை புலிகள் அபகரித்துச் செல்கின்றனர் என அங்குள்ள மக்கள் எமக்கு அறிவித்துள்ளனர். இது குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டுமெனவும் அத்துரலிய ரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்தார். (த)

# புலிகளின் முகமூடிகளைப் போட்டுக்கொண்டு சிங்கங்களும் படுகொலைகளைச் செய்கின்றன!

கொழும்பு, நவ.24

புலிகளின் முகமூடியைப் போட்டுக்கொண்டு சிங்கங்களும் படுகொலைகளைப் புரிந்து வருகின்றன.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தை எவரும் இனவாதத்துடன் நோக்கக்கூடாது. நாட்டின் அபிவிருத்திக்கு இதில் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை எவரும் இனவாதத்துடன் நோக்கக்கூடாது. நாட்டின் அபிவிருத்திக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தை குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாதீர்கள். இங்கே பாரியதொரு தேசியப் பிரச்சினை இருக்கின்றது. ஒருவரையொருவர் நம்பமுடியாத நிலை. அரசு எதைச் செய்தாலும் அதனை தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை.

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்ப ஏ-9 வீதிதான் சிறந்த வழி. ஆனால், அங்கே கப்பம் வசூலிக்கின்றார்களே அதைத் தடுக்க என்ன வழி? அரசு ஒரு தடவை வீதியைத் திறக்க முன்வந்துள்ள போது ஒரு தடவை திறந்து என்ன பயன் என கேட்கின்றனர்.



நீலன் திருச்செல்வத்தை புலிகள்தான் கொன்றார்கள். லக்ஷ்மன் கதிர்காமரையும் புலிகள்தான் கொலை செய்தார்கள். ரவிராஜ் கொலை செய்யப்பட்டார். அவரைப் புலிகள் கொலை செய்யவில்லை. யார் கொலை செய் யப்பட்டாலும் கண்டிப்பவன் நான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஈழவேந்தன் இன்று இச்சபையில் இனவாதத்தை கக்குகிறார். ரவிராஜ் எம்.பி. படுகொலை செய்யப்பட்டிருக்காவிட்டால் அவர் ஈழவேந்தனின் பேச்சை செவிமடுத்து இச்சபைக்குள் தற்கொலை செய்துகொண்டிருப்பார். ரவிராஜ் எம்.பி. சகலருடன் நட்புக்கொண்டவர்.இதமாகப் பழகுபவர். பேச்சுகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தவர். ஆனால், ஈழவேந்தன் போன்றவர்களே யுத்தத்தை விரும்புகின்றனர்.(த)

# சு.க. - ஐ.தே.க. உடன்படிக்கையை ரத்துச் செய்யக்கோரி மனுத்தாக்கல்!

கொழும்பு, நவ.24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

புளத் சிங்கள, கோவின்ன பகுதியைச் சேர்ந்த எச்.விஜயபால என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த மனுவில் பிரதிவாதிகளாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன உட்பட 23 பேர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

1947ஆம் ஆண்டின் இலங்கையின் சுதந்திரச் சட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் உரிமை (வாக்குரிமை) மற்றும் மக்களின் இறைமை என்பன இந்த உடன்படிக்கையின் மூலம் மீறப்பட்டிருக்கின்றன என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் இருகட்சிகளும் இணைந்துள்ளதால் பலமான எதிர்க்கட்சி இல்லாமல் நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்திருப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் நாடாளுமன்றத்தின் அதிகாரம் இரத்துச் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டு பிரகடனம் ஒன்றை வெளியிடுமாறும் மனுதாரர் தமது மனுவில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம் என்று பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறும் மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. (த)

# 105 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது!

கொழும்பு,நவ. 24

நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போது 105 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ஆதரவாக 133 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் பதிவாகின. (த)


2ஆவது பிறந்த தின வாழ்த்து





குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி நாகேஸ்வரன் - ரேவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் சுலக்ஷன்

செல்வன் சுலக்ஷன்

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (24.11.2006) லண்டனில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். சுலக்ஷன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, லண்டனில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சாள், மச்சான், சின்னமாமா, மாமி, மச்சான், மச்சாள், சுதன் சித்தப்பா, பாஸ்கரன் மாமா, பொஸ்வானாவில் வசிக்கும் மாமா, மாமி,மச்சாள், இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, அப்பப்பா, அம்மப்பா, கலா அத்தை, சுகந்தி அத்தை, மாமா, மச்சான்மார், ரதி அத்தை, மாமா, மச்சான், சித்திமார், மாமாமார், பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுலக்ஷன் குட்டியை சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
லண்டன். (55268) திரு. திருமதி நாகேஸ்வரன் - ரேவதி.



முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



சிவகேதீஸ்சன்(கேதா) - பாலகார்த்திகா(மதுரா) தம்பதியரின் செல்வப் புதல்வன் நாக நவீன்

தனது முதலாவது பிறந்த நாளை லண்டனில் இன்று (24.11.2006) அவரது இல்லத்தில் அப்பா அம்மாவுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். நாகாக் குட்டி பல்லாண்டு காலம் நயினை நாகபூஷணி அம்மன் அருளால் வாழ்கவென வாழ்த்துவோர் ஆனைக்கோட்டையில் இருக்கும் அம்மப்பா,அம்மம்மா, மயூரா அன்ரா, ரஜீவன் மாமா அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, அத்தைமார், மாமாமார் மச்சாள்மார், மச்சான் சந்துதன், சிந்து, வேணா, ஜெனா,ஜசி, சங்கவி, சஞ்சு, சிந்து, கேதுஷன் அனோ,நிறோ, சர்மிலா,ஜெயந்தன் ஆகியோருடன் அம்மப்பாவின் பூட்டியும் அப்பப்பாவின் பூட்டியும் நூறாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தியுள்ளனர்.

செல்வன் நாக நவீன் (நாகா)

'அம்பிகை வாசா' ஆனைக்கோட்டை.

தகவல்: அம்மப்பா

(55517)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## திரு. A.T.A. தேவராஜா

(யாழ். மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி)



தேவன் பெயர்கொண்டிங்கு
வந்தோனே
வங்கி வளமுற என்றும்
உழைத்தோனே
ராசா எனும் பெயருக்கேற்ப
சாதனைகள் பல இவ்வங்கியில்
புரிந்தோனே
எல்லோருக்கும் ஏணியாயிருந்து
39 வருடகால சேவை நிறைவில்
ஓய்வுபெறுவோனே
60 ஆவது பிறந்தநாள்
நல்வாழ்த்துக்கள் கூறுவதோடு
எல்லோருக்கும் நலன்செய்து
என்றென்றும் வாழிய நீடூழி
பல்லாண்டு என வாழ்த்துகின்றோம்.

முகவரி:
சென்மேரிஸ் லேன்,
தும்பளை,
பருத்தித்துறை.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், ரியூனிசோபியா, சர்மிளா, லொயிட்.
மருமக்கள்:பிரபாகரன், கில்றோய், நிர்மலா.
பேர்த்தி : எபியா.

(55523)

## FASHION BEAUTY CORNER



யாழ். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கொழும்பில் உங்கள் திருமணங் களை சிறப்புடன் நடத்த விரும்புகின்றீர்களா?

அப்படியாயின் உங்களுக்கான மணப் பெண் அலங்காரம், பேஷியல், மலர் ஒழுங்கு (பொக்கே), புகைப்படம் & வீடியோ, திருமண கேக் ஐசிங் தரமான முறையில் வடிவமைத்து சிறப்புடன் செய்து கொள்ளலாம். உங்கள் பதிவுகள் ஒரு கிழமைக்கு முதல் ஏற்றுக்கொள்ளப் படும்.

★கொழும்பில் பிரசித்திபெற்ற ஒப்பனை யாளர்கள் மூலம் ஒப்பனை செய்து விடப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு :-
0779564949
0779788772

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
021 2226864

(சி/50459)

## நிஜம் நிமித்தில் நிழலாகி ஓராண்டு நினைவாராதனை

| தாயின் மடியில் | | தண்ணீரின் அடியில் |
|---|---|---|
| 01 | | 05 |
| ★ | | ★ |
| 02 | | 12 |
| ★ | | ★ |
| 1986 | | 2005 |



### அமரர் விஜேந்திரன் பிரதீபன்

(யா/மத்திய கல்லூரி மாணவன்)
திதி:24.11.2006

உயிருக்குயிரானவனே உண்மையா இது உண்மையா
ஆறாத்துயரில் எமையாழ்த்தி ஆண்டொன்று ஆனதுவோ
புன்னகை பூத்த வதனம் பூப்போல் விரிந்த உள்ளம்
பட்டாம் பூச்சியாய் பறந்தவன் பாதியில் எமைப் பிரித்ததேனோ?
கண்ணயர முடியவில்லை கண்ணிலே நீ நிற்கின்றாய் கண்ட பல
கனவுகள் நனவாகிப் போகுமுன்னே
காலனவன் சடுதியாய் கவர்ந்து சென்றதேனோ?
எண்ணாமல் யாமிருக்க இடிதான் விழுந்ததேனோ?
ஏதும் ஒரு வார்த்தையேனும் பேசாமல் சென்றதேனோ?
என்னென்ன நினைத்தாயோ எப்படித்தான் துடித்தாயோ ?
உன்னைத் தவிக்கவிட்டு ஒருவனால் ஓடத்தான் முடிந்ததோ?
உன்னுறவு எம்மோடு மறுபிறவியிலும் சேரவேண்டும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பரந்தன். (55413) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 28 | | 05 |
| ★ | | ★ |
| 04 | | 12 |
| ★ | | ★ |
| 1944 | | 2005 |



### அமரர் கந்தையா சம்புலிங்கம்

திதி : 24.11.200, சதுர்த்தி

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்
தீராது அப்பா எம் சோகம் ஆறாது ஆறாது எம் சோகம்.
எம் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

10, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(55535)

தகவல்:
குடும்பத்தினர்.

### தென்மராட்சியில் முதலாம் திகதி பொதுசன உதவிப்பணம்

தென்மராட்சி, நவ.24

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், தொழுநோய், காசநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை அந்தந்த தபால் அலுவலகங்களில் வழங்கப்படும் என பிரதேச செயலக சமூக சேவைகள் பகுதியினர் அறிவித்துள்ளனர். (203)

### கலந்துரையாடல்

குடாநாட்டில் இருந்து மகரகம ஆசிரியகலாசாலைக்குத் தெரிவான ஆங்கில ஆசிரியர்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். உயர்கல்விக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

தெரிவானவர்களை இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

### தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,நவ.24

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் தகைமையுடைய சிற்றூழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தையலாளர், பாரந்தூக்கி இயக்குநர், மிதிவண்டி ஏவலாளி, நீர் சூடாக்குபவர், தொலைபேசி இயக்குநர், தச்சுத் தொழிலாளி , புத்தகம் கட்டுநர், திரைப்படக் கருவி இயக்குநர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமையுடைய சிற்றூழியர்களின் விண்ணப்பங்களைப் பெற்று வரிசைக் கிரமமாக பட்டியலிட்டு அனுப்பி வைக்குமாறு நிறுவனப் பொறுப்பதிகாரிகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (203)

### தேவை

யாழ் - கொழும்பு விமான சேவைக்கு வேலை செய்ய அனுபமுள்ள ஆண் / பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு - 0785788811 / 0785325501

### தேவை

யாழ் - கொழும்பு விமான சேவைக்கு TOYOTA HIACE டொல்பின் வான் வாடகைக்கு தேவை.
தொடர்பு - 0785788811 / 0785325501

### சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(சி/50463)

### கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்
நா.நல்லதம்பி
அவர்களின் பாசமிகு தாய்

திருமதி நாகையா தெய்வானைப்பிள்ளை

அவர்கள் காலமாகியதையிட்டு அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சாவகச்சேரி நகரசபை ஊழியர்
[illegible]
சாவகச்சேரி.

## காணவில்லை

309/50, சிவன் புது வீதி, நல்லூரைச் சேர்ந்த தர்மரட்ணம் சிவசூரியகுமார் (லக்ஸ்மி ஓட்டோஸ் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) என்பவர் சிவில் அலுவலகத்துக்கு சென்ற வேளையில் காணவில்லை. இவரைப்பற்றிய விவரம் தெரிந்தவர்கள் மேற்கூறிய முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(55524)

## கண்ணீர் அஞ்சலி



எமது சனசமூக நிலையத்தின் உறுப்பினரும், எமது விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் வீரருமான எஸ்.கிருபானந்தன் அவர்களின் துணைவியார்

திருமதி சுகந்தினி கிருபானந்தன்

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(55531)

கொக்குவில் ம.ச.ச.நிலையமும்,
விளையாட்டுக்கழகமும்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 | | 22 |
| ★ | | ★ |
| 08 | | 11 |
| ★ | | ★ |
| 1936 | | 2003 |



### அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

திதி : 24.11.2006

ஆண்டுகள் மூன்று தான் ஓடி மறைந்தாலும்
உம் நீள்துயில் தான் நீங்கிடுமா?
எம் வேதனைதான் தீர்ந்திடுமா?
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்கா நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அச்செழு,
நீர்வேலி.

(55522)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 | | 04 |
| ★ | | ★ |
| 07 | | 12 |
| ★ | | ★ |
| 1934 | | 2005 |



### அமரர் சின்னையா ஜெகதீஸ்வரி

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மகன், மருமகள், பேர்த்தி
மற்றும் சகோதர சகோதரிகள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில்,

(55525)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நல்லம்மா



சுதுமலை வடக்கு, ஈஞ்சடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நல்லம்மா (செல்லத்தங்கச்சி) நேற்று (23.11.2006) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (வர்த்தகர்) அன்பு மனைவியும் புவனேஸ்வரி, அழகேஸ்வரி (ஆசிரியை), காலஞ்சென்ற பூபாலசிங்கம், யோகேந்திரம், மகேந்திரம் (கனடா), யோகேஸ்வரி (கனடா), தங்கேஸ்வரி (சுதுமலை உப தபாலதிபர்), நகுலேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தியாகராஜா, நவரட்ணம் (போமன்), விஜய பாலன் (கனடா), இரத்தினசிங்கம் (ஜப்பான்), மாசிலாமணி (லண்டன்), கமலாதேவி, மனோன்மணி (கனடா), சறோ ஆகியோரின் அன்பு மாமியும் சிறிஸ்கந்தராஜா (தொழிலதிபர் - அன்னை என்ரபிரைஸ், இந்தியா), சிறிதரன் (உப அதிபர் - யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை), பிரித்தா (கனடா), தர்சிகன் (கனடா), சயந்தா, பிரியந்தா, சுமன் (தரம் 11, யா/ இந்துக் கல்லூரி மாணவன்), நவநீதன் (லண்டன்), நிருசா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாஹித்தியனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2006) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## பாதை திறப்பு விவகாரத்தில் முரணியல் நிலைப்பாடுகள்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கான வழி விவகாரத்தை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், இலங்கை அரசையும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் கேட்டிருக்கின்றன.

மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடையும் மார்க்கங்களைத் திறந்துவிடுவது சம்பந்தமாக - இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற - தமது வாஷிங்டன் கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்துள்ள இணைத் தலைமைகள், அது குறித்து பின்னர் விடுத்த கூட்டறிக்கையில் சில கருத்துகளையும் தெரிவித்துள்ளன. அந்தக் கருத்தியல் நிலைப்பாட்டில், கூட்டறிக்கையின் அடுத்தடுத்த வாசகங்களுக்கு இடையிலேயே முன்னுக்குப் பின் முரணான போக்குக் காணப்படுவதும், அத்தகைய முரணியல் நிலைப்பாடே இவ்விவகாரத்தைத் தனக்கு ஏற்றபடி இலங்கை அரசுத் தரப்பு மாற்றிக் கொண்டு - திரித்துக் கொண்டு - மேலும் மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்க அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பதையும் தமிழர் தரப்பு வேதனையுடனும், விசனத்துடனும், எரிச்சலுடனும் கவனிக்க வேண்டியிருக்கின்றது.

''அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்துக்காகக் கடல் மற்றும் வீதி வழிப்பாதைகளை உடனடியாகவும், நிரந்தரமாகவும், முன் நிபந்தனைகள் எதுவும் இல்லாமலும் திறந்து விடும்படி இரு தரப்பினரையும் இணைத் தலைமைகள் வேண்டிக் கொள்கின்றன.'' - என்று கூட்டறிக்கையின் ஒரு வாசகம் கூறுகின்றது.

ஆனால், அதற்கு அடுத்த வாசகமோ இலங்கை அரசு 'ஏ-9' நெடுஞ்சாலை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வாகன அணியாக விநியோகப் பொருள்களை அனுப்பி வைக்க முன்வந்திருப்பதை இணைத் தலைமைகள் இந்தச் சந்தர்ப்பத்தில் வரவேற்று நிற்கின்றன''.- என்று கூறுகின்றது.

யாழ். குடாநாட்டுக்கு ஒரே ஒரு தடவையில் மட்டும் அத்தியாவசியப் பண்டங்கள் கொண்டுசெல்லப்படும் என்று நிபந்தனையுடனேயே இலங்கை அரசின் பாதை திறப்பு அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது. அந்த ஒரு தடவைக்குப் பின்னர் பாதையைத் திறப்பது குறித்து எந்தச் சாதகமான நிலைப்பாடும் அரசுத் தரப்பினால் வெளிப்படுத்தப்படவில்லை. அரசு தற்போது விடுத்துள்ள அறிவித்தலில் தரைவழிப் பாதையை உடனடியாகவும், நிரந்தரமாகவும் திறக்கும் சாத்தியம் இல்லை என்பதும் எழுதாப் பொருளாக வெளிப்பட்டு நிற்கின்றது.

அப்படியிருக்க -

விநியோகப் பாதையை உடனடியாகவும், நிரந்தரமாகவும், முன் நிபந்தனைகள் எதுவும் இல்லாமலும் திறந்து விடும்படி கூட்டறிக்கையில் கோரும் இணைத் தலைமைகள், நிபந்தனையோடு ஒரேயொரு தடவை மட்டும் யாழ். குடாநாட்டுக்கான பாதையைத் திறந்துவிடும் அரசின் முடிவை கூட்டறிக்கையின் அடுத்த வாசகத்தில் மெச்சிப் பாராட்டுவதன் மூலம் முரணியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

'பாதையைத் திறப்பதற்கான முதல் நடவடிக்கை' என்று அரசின் செயற்பாட்டுக்குப் புகழாரம் சூட்டி வரவேற்பதோடு அமைந்துவிடும் இணைத் தலைமைகள், அந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக அப்பாதையை நிரந்தரமாகவும், உடனடியாகவும், நிபந்தனையின்றியும் திறப்பதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும் என்று வற்புறுத்தாமல் விட்டமை ஏன்?

சர்வதேச சமூகத்தின் இத்தகைய பாராமுகப் போக்கே - அல்லது பக்கச் சார்பான போக்கே - இலங்கை அரசு மனிதாபிமான விவ காரங்களில் தொடர்ந்து இத்தகைய தவறுகளை இழைப்பதற்குத் தூண்டு கோலாகவும், பின்னணியாகவும் உள்ளது என்றே தமிழர்கள் கருதுகின்றனர்.

இணைத் தலைமைகளின் கூட்டறிக்கை வெளியான கையோடு, இலங்கையின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல விடுத்த அறிவிப்பு இதனை நன்கு புலப்படுத்துகிறது.

''ஏ-9 பாதையைத் திறப்பதற்கு அரசு முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்காவிட்டால் அப்பாதை திறக்கப்படமாட்டாது. நிபந்தனை விடயத்தில் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை. அரசின் நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுக் கொண்டால் நாம் இப்போது முதலே நிரந்தரமாகப் பாதையைத் திறந்துவிடத் தயார்.'' - என்று அவர் அறிவித்திருக்கின்றார்.

மக்களின் மனிதாபிமானச் சிக்கல்களோடு தொடர்புடைய - 'ஏ-9' போன்ற பாதைகள் ஊடான - வீதி மார்க்கங்களை நிபந்தனை ஏதுமின்றித் திறந்துவிட இணைத் தலைமைகள் வற்புறுத்திய கையோடே, அப்பாதை திறப்பதற்கான நிபந்தனைகள் குறித்து இலங்கைப் பாதுகாப்புத் துறையின் பேச்சாளர் பகிரங்கமாக அறிவிப்பது, இணைத் தலைமைகளின் கூட்டறிக்கையைத் தூக்கி எறிந்து உதாசீனம் செய்யும் - அப்பட்டமான பொறுப்பற்ற - போக்கு.

இத்தகைய செயற்பாடுகள்தாம் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் முன் நகராமல் தடைப்பட்டுப் போனமைக்குப் பிரதான காரணங்களாகும்.

இந்த அடிப்படை, உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளுக்கும் புரியாமல் இருப்பது தமிழர்களின் துரதிஷ்டமேயன்றி வேறில்லை.

# வடக்கு-கிழக்கு பிரதேசங்களை அகதி முகாமாக்குகின்றது அரசு

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.24

''வடக்கு - கிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைச் சிங்கள அரசு அகதி முகாம்களாக மாற்றி வருகின்றது.'' - இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

கொழும்பு - 'நிப்பொன் ஹோட்டலில்' நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ''நாடு தற்போது மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். வடக்கு - கிழக்கை இலங்கை அரசு அகதி முகாம்களாக மாற்றி வருகின்றது. ஆனால், அரசோ நாட்டைப் பாதுகாக்கும் யுத்தமே தற்பொழுது நடைபெற்று வருகின்றது என்று கூறி வருகின்றது.

நாட்டின் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஒன்றிணைந்து மக்களுக்கு எது வித நன்மையையும் செய்யவில்லை. தமிழர்களின் பிரச்சினையை ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டாலும், இலங்கை அரசு ஏற்றுக்கொள்வதாக இல்லை'' என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தினால் நாட்டு மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. மாறாக இலங்கை அரசின் போர்ச் செலவுகளுக்கும், ஆடம்பரச் செலவுகளுக்குமே அது பயன்படப் போகின்றது. இதற்கு உதவியாக உலக முதலாளித்துவ நாடுகளும் அரசின் பின்னால் செயற்பட்டு வருகின்றன. ரணிலின் கட்சி, அரசுக்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்று கூறி சாக்குப் போக்குக் கூறி வருகிறது. மேலும் தமிழ் மக்களுக்குச் சார்பாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கும் ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டமை, ஜோஸப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டமைக்கு அரசுகளே பொறுப்பேற்க வேண்டும். அதேபோல், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே பொறுப்புக் கூற வேண்டும் -

பிரேஸில் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளில் எமது இடதுசாரி முன்னணியினர், தமிழர்கள் சார் பாகப் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், இனிவரும் காலங்களில் மஹிந்த அரசுக்கு எதிராகப் போராட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது - என்றும் இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (த)

## செஞ்சிலுவையின் ஏற்பாட்டில் இலவசமாக 18 ஆயிரம் குழந்தைகளுக்கு பால்மா

குடாநாட்டில் உள்ள 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட 1முதல் 3 வயதுக்கு இடைப்பட்ட சகல குழந்தைகளுக்கும் அங்கர் 1⁺ பால்மா இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இந்தப் பால்மாவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இலவசமாக யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் தாய்சேய் நல சிகிச்சை நிலையங்கள் ஊடாக வழங்க இருப்பதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

- பால்மா தொகுதி கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகட்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இப் பால்மா விநியோகம் எதிர் வரும் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 2ஆம் திகதிக்கு இடையிலான காலப் பகுதியில் இடம்பெறும்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியும் தமது பிரிவிலுள்ள தாய்சேய் நல சிகிச்சை நிலையங்களில் பால்மா விநியோகிக்கப்படும் திகதி, நேரம் பற்றி பகிரங்கமாக அறிவிப்பார்கள். குழந்தைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டில் பதிவு செய்தே பால்மா விநியோகிக்கப்படும். ஒரு குழந்தைக்கு ஒரு பக்கற் மட்டும் வழங்கப்படும்.

தாய்மார் தமது குழந்தைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டை எடுத்துச் சென்ற பால்மாவை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு அவ்வப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொள்ளவும் - என்றார் அவர். (1-111)

## தமிழ் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஐ.தே.க. உறுப்பினர் ராஜித எம்.பி. கோரிக்கை

கொழும்பு. நவ.24

தமிழ் செய்தியாளர்கள் கடத்தப்படுவது, கொலைசெய்யப்படுவது அதிகரித்துள்ளது. இவற்றை தடுத்து நிறுத்தவும், செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஐ.தே.க. கட்சி எம்.பி. ராஜித சேனாரட்ண நேற்று தகவல் ஊடகத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

எதிர்க்கட்சியினருக்கு சேற்றை வாரி வீசும் வகையிலான செய்திகள் இப்போது அரச ஊடகங்களில் வெளிவருவதில்லை. இதற்காகநான் தகவல் ஊடகத்துறை அமைச்சருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்வதேச ரீதியில் பிரசித்திபெற்ற 12 ஊடக அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் சென்றனர்.

இவர்கள் இங்கு அறிக்கையொன்றையும் வெளியிட்டனர். சுதந்திரமாக உண்மையான செய்திகளை வெளியிடும் உரிமை செய்தியாளர்களுக்கு இருக்க வேண்டும். செய்தியாளர்கள் கடத்தப்படுவது, கொலைசெய்யப்படுவது, அச்சுறுத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும். செய்தியாளர்கள் அரசியல்வாதிகளைப் போன்றவர்கள். இரண்டு தரப்பினருக்கும் காலம், நேரம் இல்லை. செய்தியாளர்கள் வண்ணாத்திப்பூச்சி போன்ற அப்பாவிகள். அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

#### கருத்துச் சுதந்திரம் உண்டு

இன்று தமிழ் செய்தியாளர்கள் கொலை செய்யப்படுகின்றனர், கடத்தப்படுகின்றனர், அச்சுறுத்தப்படுகின்றனர். இவை தடுக்கப்படவேண்டும். செய்தியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும். இந்நாட்டில் கருத்துச் சுதந்திரம் இருக்கிறது. ஒரு செய்தியாளர் ஒரு கருத்தைத் தெரிவித்தால் அவர்களைப் புலி என விமர்சிப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

2004 ஆம் ஆண்டில் சிவராம் தராக்கி கொலை செய்யப்பட்டார். இது குறித்து எவரும் கைதுசெய்யப்படவில்லை. ரேலங்கியும் அவரது கணவரும் கொலை செய்யப்பட்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை. ''சுடர் ஒளி'' திருகோணமலை சுகிர்தராஜன் கைக்குண்டு எறிந்து கொல்லப்பட்டார். யாழ் குடாநாட்டில் 'உதயன்' பத்திரிகையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். நான் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும்போதெல்லாம் 'உதயன்' அலுவலகத்திற்கு செல்வேன். இறுதியாக நான் யாழ்ப்பாணம் சென்றபோது 'உதயன்' பத்திரிகை என்னிடம் ஒரு பேட்டியையும் எடுத்து வெளியிட்டது.

சாம்பசிவம் பாஸ்கரன் என்ற பத்திரிகை விநியோகிப்பவரும் கொலைசெய்யப்பட்டார். பத்திரிகை விநியோகித்தது ஒரு குற்றமா? இக்கொலைகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. எனவே இவையெல்லாவற்றையும் கவனத்திற்கொண்டு செய்தியாளர்களுக்கு போதியபாதுகாப்பு வழங்கவேண்டும் - என்றார் ராஜித எம்.பி.

## நாளை

கார்த்திகை 09
சனிக்கிழமை
25.11.2006
திதி : பஞ்சமி
பின்னிரவு : 02.40
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு : 03.59
சுபநேரம் : 03.12 - 04.42
ராகுகாலம் : 09.12 - 10.42

### பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.24

திருநெல்வேலி குகன் எரிபொருள் நிலையத்தில் வாகன எரிபொருள் அட்டைகளுக்கு இன்று பெற்றோல் விநியோகம் செய்யப்படும்.

கடந்த 9ஆம் திகதிக்கு முன்னர் பெற்றோல் பெற்றுக்கொண்டவர்களுக்கே இன்று காலை 6.30 மணியிலிருந்து விநியோகம் செய்யப்படவுள்ளது.

ஓட்டோ, மோட்டார் சைக்கிள், போன்றவற்றுக்கு 300 ரூபாவிற்கும் காருக்கு 500 ரூபாவிற்கும் பெற்றோல் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-203)

### ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,நவ.24

சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் கார்த்திகை மாத இதழ் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை ஆசிரியர் இ. சண்முகசுந்தரமும் மதிப்புரையை பேராசிரியர் அ.சண்முகதாசும் நிகழ்த்தவுள்ளனர். (203-173)

### ஆவணக் காப்பாளர் பதவி போட்டிப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்,நவ.24

கல்வித் திணைக்களத்தில் உள்ள ஆவணக் காப்பாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்தில் 18 நிலையங்களில் நடைபெறவுள்ளது என்றும் -

இந்தப் போட்டிப் பரீட்சையில் 2 ஆயிரத்து 500 பேர் தோற்றுகின்றனர் என்றும் -

பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்றும் - கல்வித் திணைக்கள யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தபால் திணைக்களத்தில் இந்தப் பதவிகளுக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நாளை நடைபெறும் என நேற்று வெளியான செய்தி தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (1-88-111)

### திருநெல்வேலிப் பகுதியில் சுற்றிவளைப்பு

திருநெல்வேலி பாற்பண்ணை, சின்னக் கொலனி ஆகிய பகுதிகள் இராணுவத்தினரால் நேற்று அதிகாலை சுற்றிவளைப்புக்கு உள்ளானது.

காலை 6.30 மணியளவில் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டில் உள்ளவர்களை ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடுகள் இன்றி முருகன் வீதியில் அமைந்துள்ள பொது மைதானத்திற்கு கொண்டு சென்றனர்.

வீடுகளைச் சோதனையிட்ட இராணுவத்தினர் பொதுமக்களை ஒளிப்படம் எடுத்த பின்னர் வீடுகளுக்குச் செல்ல அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (1-68)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ஏ-9' ஊடாக உணவு எடுத்துச் செல்ல லொறிகளை வழங்குமாறு கோரிக்கை

## அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவிப்பு

கொழும்பு, நவ.24

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப்பொருள் கையிருப்பை எடுத்துச் செல்வதற்காகக் கண்டி வீதி ஊடாகச் செல்ல விருக்கும் வாகன அணிக்கு லொறிகளைத் தந்து உதவுமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல லொறிகளைத் தந்து உதவ விரும்புவோர் அதற்குரிய படிவத்தைப் பூர்த்தி செய்து பதிவை மேற்கொள்ளுமாறும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாகப் பத்திரிகை அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

''தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் காரணமாகப் பொருள்களை அனுப்புவதற்கு 'ஏ-9' பாதையைப் பிரயோகப்படுத்த முடியாத காரணத்தால் அரசு கடல் மார்க்கமாக உணவுப் பொருள்களையும், எரிபொருள்கள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் அனுப்புவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் பொருள்களின் தடையில்லாத வழங்கலை நிச்சயப்படுத்தியது.

நிலைவரத்தை மீளாய்வு செய்தும், சமயப் பெரியார்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் விண்ணப்பங்களையும் கவனத்தில் எடுத்தும் அடுத்த வாரங்களில் காலநிலை சீரற்றதாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும், யாழ்ப்பாணத்திற்கு ஏ-9 வீதி ஊடாக அத்தியாவசியப் பொருள்களை அனுப்பும் வசதிகளைச் செய்யுமாறு மேன்மை தங்கிய ஜனாதிபதி அத்தியாவசிய ஆணையாளர் நாயகத்திற்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்குப் பாரவூர்திகளை வழங்க விரும்பும் பாரவூர்தி உரிமையாளர்களையும், பொருள்கள் சுமக்கும் பாரவூர்தி நிறுவனங்களையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். பாரவூர்தி உரிமையாளர்களும், பாரவூர்தி உரிமை நிறுவனங்களும் தங்கள் சிரத்தையை வெளிப்படுத்தும்படி வேண்டப்படுகின்றனர்.

அத்தியாவசிய சேவை ஆணை யாளர் நாயகம், உற்பத்தியாளர்களையும், இறக்குமதியாளர்களையும், மொத்த விற்பனையாளர்களை யும் தமது பொருள்களை யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் விநியோகஸ்தர்கள், முகவர்கள் மூலம் விநியோகித்து இப்பொருள்கள் விநியோகத்தில் பங்கேற்க விரும்பின் தங்கள் சிரத்தையை அறிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர். அப்படியாயின் பொருள்களின் விபரம், அனுப்பக் கூடிய தொகை, பாரவூர்தியில் ஒதுக்க வேண் டிய இட அளவு (மெற்றிக் தொன் அல்லது கன மீற்றரில்) என்பனவற்றையும் குறிப் பிடவும்.'' - என்று தெரிவிக்கப் பட்டுள் ளது. (ஐ)

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் ஆசிய மேயர்கள் மாநாட்டுக்குப் பிர தம் அதிதியாக ஜனாதிபதி அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த மாநாட்டை அன்று ஆரம்பித்து வைக்கும் ஜனாதிபதி அங்கு சிறப்புச் சொற்பொழிவு ஒன்றையும் நிகழ்த்த இருக்கிறார்.

மாநாட்டின் பின் புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார். இலங்கையின் அரசியல் நிலைவரங்கள் குறித்துப் பேசும்போது இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில்சகல கட்சிகளினதும் பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்குத் தாம் எடுத்துவரும் நடவடிக்கைகளை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறி, நிதானமாக செயல்படுவதற்குத் தமக்கு ஒத்தாசை வழங்குமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொள்ளலாம் எனவும் தெரிய வருகிறது.

சர்வதேச சமூகத்திலிருந்தும் நச்சரிப்புகள் வருகின்றன. அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வொன்றைக் கண்டறிவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதற்குச் சகல இனத்தினதும் பொது இணக்கப் பாட்டைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இணக்கப்பாட்டிலேயே இதன் வெற்றி தங்கியிருக்கிறது என்று அரசின் தீர்வு முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்ட அரச அதிகாரி ஒருவர், ''இந்தியா கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும். இதனையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார்; எதிர்பார்க்கிறார்'' என்றும் கூறினார்.

# வவுனியா மாணவர் கொலை; பொலிஸ் அலுவலர் கைது!

## 5 ஆம் திகதி அடையாள அணிவகுப்பு

வவுனியா, நவ. 24

வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள விவசாயக் கல்லூரிக்கு சமீபமாக கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து குறித்த கல்லூரியின் மாணவர்கள் ஐவர் சுட்டுக்கொல்லப் பட்டமை தொடர்பாக பொலிஸ் அலுவலர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

மாணவர்களின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை பிரஸ்தாப பொலிஸ் அலுவலரைக் கைதுசெய்து வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். 5ஆம் திகதி மீண்டும் வவுனியா நீதிமன்றில் அவரை ஆஜர் செய்யுமாறும் - அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் - நீதிவான் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார். (த)

## வாகரையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் 'தமிழ் நெற்' இணையச் செய்திக்குத் தெரிவித்திருக்கிறார்.

கஜுவத்தை, மாங்கேணி ஆகிய படைமுகாம்களில் இருந்து படையினர் தரைவழித் தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றனர் என்றும் -

விமானக் குண்டுவீச்சு மற்றும் கடும் ஆட்லறி ஷெல்வீச்சு மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல் களின் உதவியுடன் படையினர் தரைவழியாக நகர முயல்கின்றனர் என்றும் இராசையா இளந்திரையன் கூறினார்.

வாகரையின் தெற்கு எல்லையில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட சூனியப் பகுதிக்கு நகர்ந்த படையினர் மீது தங்கள் போராளிகள் தாக்குதல் நடத்திப் பின்வாங்கச் செய்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இராணுவத் தரப்பில் இருந்து முழுமையான விவரங்கள் உடனடியாகப் பெற முடியவில்லை. ஆயினும், புதன்கிழமை இரவு இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளின் எல்லைக்கு நெருக்கமாக முன்னேறி வந்த புலிகள், பின்னர் அப்பகுதியில் நேற்றுக்காலை முதல் படை நிலைகளைத் தாக்கத் தொடங்கினர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் ஏ.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

முதலில் ஆட்டிலறிகள் கொண்டு புலிகள் மீது தாக்குதல் நடத்திய படையினர் பின்னர் விமானப் படையின் உதவியைக் கோரினர் என்று பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், புலிகளின் பேச்சாளர் இளந்திரையன், இராணுவம் புதிதாகத் தாக்குதல் நடவடிக்கை ஒன்றைத் தொடக்கி, தங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பிரவேசிக்க முயற்சிப்பதாகத் தெரிவித்தார்.

- இவ்வாறு ஏ.பி. செய்தி தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

இராணுவத்தின் தரப்பில் 11பேர் வரை காயமடைந்திருக்கின்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

திட்டமிட்டு மேற்கொள்ளும் யுத்த நிறுத்த மீறல்களை தரப்புகள் கைவிட வேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் வேண்டுகோள் விடுத்து 24 மணித்தியாலங்கள் கழிவதற்குள் கிழக்கில் இந்த மோதல் வெடித்திருக்கின்றது.

நேற்றைய ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களால் வாகரையில் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரும் பீதியடைந்து காணப்பட்டனர். (ஐ)

# விநாயகபுரத்தில் கருணாகுழு உறுப்பினர்கள் இருவர் படுகாயம்

வாழைச்சேனை, நவ. 24

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கருணாகுழு உறுப்பினர்கள் இருவர் படுகாயமடைந்தனர். இருவரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த கருணாகுழுவின் மற்றொரு அணியினர். அப்பகுதியில் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. (த)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித்தலைவர்ரணில்விக்கிரமசிங்கஆகியோரையும்மேனன்சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றிரவு அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த மேனன் இலங்கை விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழிமுறைகள் பற்றி ஆராய்ந்தார். குடாநாட்டுக்கான ஏ-9 பாதையை திறக்க வேண்டும் என்று அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அறியவந்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கீதா டி. சில்வாவையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இலங்கையில்அதிகரித்துவரும்வன்முறைகள்தொடர்பில் இந்தியாவின்கவலை யையும், கரிசனையையும் அவர் இலங் கைத் தலைவர்களிடம் வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் இன்று டில்லி திரும்புகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொள்ள விருக்கும் விஜயம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து இவர் ஆராய்ந்தார் என்றும் - ஜனாதிபதிக்கும் மேனனுக்கும் இடையில் நட்புறவு ரீதியான சந்திப்பு இடம்பெற்றதாகவும் நேற்றிரவு வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

அறிவித்தல்
விமானப்பயணம்
யாழ். - கொழும்பு ஒரு வழி ரூபா 8200/=

அவசர பயணத்தினை மேற்கொள்ள இருப்பவர்கள் காரணத்தினை Fax மூலம் 011 2399650, நேரில் - 0777 517019 தெரியப்படுத்தவும். முன்னுரிமை அளிக்கப்படும்.
சகல பயணிகளும் பாதுகாப்பு அனுமதியுடன் பதிவுகளுக்கு வரவும்.
தொடர்புகளுக்கு:
MANOJ AIR TOURS (PVT) LTD
No. 6. NEW MARKET BUILDING
JAFFNA.
Tel : 021 222 3916

விரைவுப் பொதிகள் சேவை
(PARCEL SERVICE)
(பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள்)
சர்வதேச நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
குறிப்பு: கொழும்பு/ யாழ்ப்பாணம்/ கொழும்பு விரைவுப் பொதிகள் சேவைகள் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து உங்களுக்குத் தேவையான உணவு, உடை, அலங்காரம், அன்பளிப்பு பொருள்களை எம்மூலமாகக் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன்
யாழ்/ கொழும்பு/ யாழ்
விமான ரிக்கற்றுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
RAINBOW TRAVELS & TOURS
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3237
011 5371629 - கொழும்பு
077 7535988 - கொழும்பு
(55532)

நாளை ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பொருளியல்
திரு.B.சுஜீதரன்
A/L DAY CLASS
(Sat., Sun. 7.00-5.00)
A/L 2007
(9.00 - 10.00)
சந்தைப்
பொருளாதாரம்
(10.00 - 11.00)
A/L 2008
(Sat., Sun. 8-9)
Unit II
சந்தைப்

## உதயன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் அறிந்திருப்பர்.

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த 2 ஊழியர் கொலை செய்யப்பட்டனர். கொலையாளிகள் கொலை செய்துவிட்டு படையினரின் ஏழுக்கு மேற்பட்ட சோதனைச் சாவடிகள் ஊடாக தப்பிச் சென்றனர். தப்பிச்சென்றவர்களின் வாகன இலக்கம் பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டும் கொலையாளிகள் கைதுசெய்யப்படவில்லை.

'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்குள் புகுந்த கொலையாளிகள் 20 நிமிடங்கள் அங்கு அட்டகாசம் புரிந்தனர். 2 ஊழியர்களை சுட்டுக்கொன்றனர். லட்சக்கணக்கான் ரூபா பெறுமதியான பொருட்களைச் சேதப்படுத்தினர்.

### அரசின் உள் மட்டத்தில் இருந்து அச்சுறுத்தல்

மறுநாள் எனது வீட்டிற்கருகில் வசிக்கின்ற மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர், இக்கொலைகள் தொடர்பாக புலிகளைக் கைதுசெய்துவிட்டோம் என்று அரச பேச்சாளர்கள் கூறினர். நல்ல வேளை அந்த மாணவர்கள் விடுவிக்கப் பட்டனர்.

'உதயன்' மற்றும் 'சுடர் ஒளி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரன் மற்றும் அப்பத்திரிகைகளின் உரிமையாளர் சரணவபவன் ஆகியயோருக்கும் அரசின் உள்மட்டத்தில் இருந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது.

'சுடர் ஒளி' பத்திரிகை நிறுவனம் பல முறை படையினரால் சோதனையிடப்பட்டுள்ளது. சோதனையிட்டவர்கள் அங்கிருந்து எதனைக் கண்டெடுத்தார்கள் என்றே தெரியாது.

'உதயன்' தாக்குதல் தொடர்பாக ஏன் அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? கொலையாளிகள் தொடர்பாக உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்தும் அரசு மௌனம் காப்பது ஏன்?

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதினால் தானா இந்த ஊடக வியலாளர்கள் கொலைசெய்யப்படுகிறார்கள் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். இனிமேலாவது இந்த ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க - ஊடகவியலாளர்களின் உயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (க)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பக்கியெல்ல என்னும் இடத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடந்த பகுதியில் விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org